2022 ஏப்ரல் 27]

தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

188—

வனத் துறை சாலை

***263—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தோலம்பாளையம் முதல் கோபனாரி வரையுள்ள சாலையில் வனத் துறை பகுதிச் சாலையை ஊரக வளர்ச்சித் துறையிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தோலம்பாளையம் முதல் கோபனாரி வரை உள்ள சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான வனச் சாலையை ஊராட்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி, உரிய கருத்துருவை பயனாளித் துறையான காரமடை ஊராட்சி ஒன்றிய B.D.O. அனைத்து விவரங்களுடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தால், பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தை நான்*

பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தோலம்பாளையம்–கோபனாரி சாலையானது 16 கி.மீ. தூரம் இருக்கின்ற சாலையாகும். கிட்டத்தட்ட 10 மலைவாழ் கிராம மக்கள் பயன்படுத்துகின்ற சாலை. 16 கி.மீ. நீளமுள்ள இந்தச் சாலையில் வனப் பகுதிக்கு முன்னும், பின்னும் இருக்கின்ற 12 கி.மீ. சாலை, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: ரூ.12 கோடி செலவில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நல்ல தார்ச் சாலையாக அமைக்கப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வனத் துறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அங்கிருந்து நடந்து வருவதற்கு நீண்ட நேரம் ஆகும். (சிரிப்பு)

திரு. A.K. செல்வராஜ்: 4 கி.மீ. சாலை அமைக்க ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட காரணத்தினால், அந்தப் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. A.K. செல்வராஜ்: ரூ.1 கோடியே 40 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிதியை ஒதுக்கீடு செய்து தர வேண்டும். ஏற்கெனவே இருக்கிற அந்தச் சாலையை உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்கச் சொல்லி நான் கேட்டிருந்தேன். தற்போது, இந்தச் சாலைப் பணியானது நெடுஞ்சாலைத் துறையின்மூலம் எடுக்கப்பட்டுவிட்டதால், இடையில் இருக்கின்ற அந்த 4 கி.மீ. சாலையை அமைக்க நெடுஞ்சாலைத் துறைக்கு மனு செய்யும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கான ஒப்புதலை வழங்க வேண்டும். ஏனென்றால், இது இரண்டு மாநிலங்களை இணைக்கின்ற சாலை.

2022 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் ஒரு கேள்விக்கு மட்டுமே 5 நிமிடங்கள் எடுத்துக்கொண்டால் எப்படி? நீங்கள் அந்தச் சாலை அமைப்பதற்கான டெண்டர் விட்டு, சாலை அமைக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அதுதானே! மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம் பகுதியில் முன்னாலும் பின்னாலும் உள்ள சாலைகளைப் பற்றியெல்லாம் நீங்கள் கேட்கவில்லை. அதாவது, தோலம்பாளையம் முதல் கோபனாரி வரையுள்ள தார்ச் சாலையானது மொத்தம் 7.5 கி.மீ. தூரம்தான் இருக்கிறது. அது 3.75 மீட்டர் அகலம் உள்ளது. அங்கு மேல்பாவி முதல் பட்டிச்சாலை வரை 4.12 கி.மீ. நீளமும், 3.75 மீட்டர் அகலமும் உள்ள சாலையானது, கோயம்புத்தூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட கோபனாரி வனப் பகுதிக்குள் அமைந்துள்ளது. இந்தச் சாலை முனுகுட்டை, மேல்பாவி, கோபனாரி, தோலம்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 2,000 மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. எங்களுக்குக் கிடைக்கின்ற நிதியாதாரத்தை வைத்து இந்தச் சாலையை நாங்கள் முடிந்தவரை அமைத்துத் தருகிறோம். இல்லையென்றால், அந்த வனச் சாலை அமைக்க காரமடை ஊராட்சி ஒன்றியத்தின்* B.D.O.*மூலம்* online*-ல்* application *அனுப்பினால், அதற்கு உடனே* NOC *கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல, மேட்டுப்பாளையம் தொகுதியில், நெல்லித்துறையிலிருந்து பில்லூர் அணை வரை இருக்கின்ற 8 கி.மீ. சாலை வனப் பகுதியில் உள்ளது. இந்தச் சாலையை கிட்டத்தட்ட 12 மலைவாழ் கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். பில்லூர் அணைப் பகுதியிலிருந்து மேட்டுப்பாளையம் தாலுகா அலுவலகத்திற்கோ அல்லது தாலுகா மருத்துவமனைக்கோ வர வேண்டுமானால், கிட்டத்தட்ட 48 கி.மீ. தூரம் சுற்றி வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த 8 கி.மீ. சாலையை தார்ச் சாலையாக மாற்றினால், இந்தச் சாலை பொது மக்களுக்கும்*

உபயோகமானதாக இருக்கும்; Ooty–க்குச் செல்வதற்கு ஒரு மாற்றுப் பாதையாகக்கூட அமையக்கூடிய வாய்ப்பும் இருக்கும். ஆகவே, நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தச் சாலையை அமைக்க ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக மனு செய்கிறபோது, அதற்கான அனுமதியை வனத் துறைமூலம் வழங்க வேண்டும். பிரதம மந்திரி சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் (PMGSY) Category I–ன்கீழ் இந்தச் சாலை இருக்கிறது; அதற்கான நிதியும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு அனுமதி கொடுத்தால், இந்தச் சாலையை உடனடியாக மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கு ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மாநிலம் முழுவதும் இருக்கின்ற பிரச்சினை. எல்லா மலைகளிலும் மலைவாழ் மக்கள் வசிக்கின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வியைப் புரிந்துகொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) கேள்வியைப் புரிந்துகொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) ஒன்றிய அரசின்மூலம் பணிகளைச் செய்வதற்கு வனத் துறையின் அனுமதி வேண்டும் என்பதுதானே! மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், சொல்லுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: அந்தச் சாலைகளை அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கென ஒரு High Level Committee அமைத்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோரை உறுப்பினர்களாக வைத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே committee இருக்கிறது. அவர்கள் செய்வார்களா என்று மட்டும் கேளுங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் 13 மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து எங்கெங்கு, என்னென்ன

2022 ஏப்ரல் 27]

சாலைகள் தேவை, வனத் துறை மூலமாக அவர்களுக்கு என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன, எதனை செய்து தர வேண்டுமென்று கேட்டு, அதன்படி அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருடம் கோயம்புத்தூர் பகுதியிலும், நீலகிரி பகுதியிலும் மற்றும் போகாத மாவட்டங்களுக்கும் நான் தொடர்ந்து வருவேன். வனப் பகுதியில் சாலை அமைக்க அனுமதி பெறுவதற்கு PARIVESH web portal *என்ற ஒரு* website *இருக்கிறது. அந்த* website *மூலமாக பயனீட்டாளர்கள்* application *கொடுத்தால் அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்த* application *போடுகிற அத்தனை சாலைகளுக்கும்—நிறைய சாலைகள் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன என்றால், ஒருநாள் உங்கள் மாவட்டத்திற்கு நானே வருகிறேன். உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வன அதிகாரியிடம் கலந்துபேசி ஒட்டுமொத்தமாக அந்த சாலைகளுக்கு* application *போட வைத்து, எல்லாவற்றையும் முழுவதுமாக சரிசெய்து கொடுத்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி* S. *விஜயதரணி அவர்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட, கடையால் பேரூராட்சியில் வலியயேலா கிராமம் வனப் பகுதியில் இருக்கிறது. ஆண்டாண்டு காலமாக அங்கு சாலைகள் இல்லை. இருளில் மூழ்கி இருக்கும் ஒரு கிராமமாக இருந்து வருகிறது. மக்களுக்கு அங்கு அதிகமாக* Voter ID*–க்கள் கொடுத்திருக்கிறோம். வாக்கு அளிக்கிறார்கள்; ரேஷன் கார்டுகள் கொடுத்திருக்கிறோம். எல்லாம் கொடுத்திருக்கிறோம். ஆனால், மின்சாரம் கொடுக்க முடியவில்லை, சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை. இந்தப் பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது. ஆகையால், உடனடியாக அந்தக் கிராமத்திற்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். முந்தைய 2006–2011–ல், ஐயா கலைஞர் அவர்கள் ஆட்சியில் 75 குடும்பங்களுக்கு அங்கு மின்சாரம் கொடுத்தோம். அதைத் தொடர்ந்து இப்போது மீதமுள்ளவர்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தில்,* Section *4–*A*–ன்படி வனக் குழு கூட வேண்டும். அந்தக் குழு அடிக்கடி கூடாததால் நிலங்களை விற்பது, வாங்குவது போன்றவை சம்பந்தமாக இந்த வனப் பகுதி*

மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகையால், Tamil Nadu Preservation of Private Forests Act 1949–ன்படி உள்ள குழுவை, முழுமையாக வாரத்திற்கொரு நாள் கூடுவதுபோன்று இயக்க வேண்டும். கேரளாவில் இருப்பதுபோன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திருமதி S. விஜயதரணி: இந்தச் சட்டத்திலிருந்து பட்டா நிலங்களை முழுமையாக விடுவிப்பு செய்ய வேண்டும். அப்போதுதான் வனப் பகுதியில் இருக்கிற மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். வனச் சாலைகள், குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் எல்லாமே கிடைக்க வசதியாக இருக்கும். ஆகையால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் செய்துதர முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் வனப் பாதுகாப்புச் சட்டம் என்பது ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தின்கீழ் வரும் பகுதிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலிருக்கிற குழுவிற்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இரண்டு மாதங்களுக்கொரு முறையாவது நீங்கள் கூடி, அங்கே இருக்கிற பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை நிச்சயமாக செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன சாலையானது, எவ்வளவு நீளம் இருக்கிறது, எவ்வளவு அகலம் இருக்கிறது என்ற விவரத்தைக் கொடுத்தால், ஒரு ஹெக்டேருக்குள்ளே வந்தால், எங்களுடைய துறைத் தலைவர் அவர்களே உத்தரவு கொடுத்துவிடலாம். ஒரு ஹெக்டேருக்கு அதிகமாக வந்தது என்று சொன்னால், அதை ஒன்றிய அரசுக்கு அனுப்பி, ஒன்றிய அரசிடம் உத்தரவு பெற்று, அதிகபட்சமாக ஒரு மாதத்திற்குள் அந்த உத்தரவைப் பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலைக் கிராமத்திற்கு முத்துக்குமரன் மலையிலிருந்து பீஞ்சமந்தை வரை சுமார் 6½ கிலோ மீட்டர் அளவிற்கு சாலை அமைக்க 5.11 கோடி ரூபாய் அளவிற்கு* tender *விடப்பட்டது. நான்காவது* call *ஆக இதுவரை அதை யாரும் எடுக்க முன்வரவில்லை. காரணம் கேட்டபோது, சரியான திட்ட மதிப்பீடு தயார் செய்யவில்லையென்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, 20,000 மக்கள்தொகை கொண்ட அந்த மலைக் கிராமத்திற்கு, அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்தச் சாலையை அமைத்துத் தருவதற்கு ஒரு திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்து, அந்த* tender*–ஐ விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்களிடத்தில் இதுகுறித்து ஏற்கெனவே நான் பேசியிருக்கிறேன். நிச்சயமாக வனத் துறை அதிகாரிகளிடம் பேசி, அங்கிருக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

முற்பகல் 11–15

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட தீட்டாலம் முதல் கோழியாலம் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள சாலை அமைக்கப்படாமல் உள்ளது. இதனால் பேருந்துகள் இயக்குவதற்கு சிரமம் ஏற்படுகிறது. பொதுமக்களும், பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களும், கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களும் மிகவும்*

சிரமப்படுகின்றார்கள். எனவே, வனத் துறையின் அனுமதியோடு இச்சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிக்குள் புதிதாக சாலை அமைக்க வேண்டுமெனில் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 பிரிவு, 2-ன்கீழ் மத்திய அரசால் வடிவமைக்கப்பட்டுள்ள* PARIVESH web portal *என்ற இணையதளத்தில் பயனீட்டுத் துறைமூலம் பதிவேற்றம் செய்யும் நேர்வில் வன நிலம் ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய-மாநில அரசின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதவரம் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றியத்திலே பழைய எருமட்டிபாளையம், புதிய எருமட்டிபாளையத்திற்குச் செல்லக்கூடிய பாதை, வனப் பகுதி வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால் கடந்த 12 ஆண்டு காலமாக சாலை வசதியில்லாமல் மக்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். தற்போது வனத் துறையினர் அந்த நிலத்தை அளந்து, 5½ மீட்டர் நிலம்தான் கொடுத்திருக்கிறார்கள். சாலை அமைப்பதற்கு 5½ மீட்டர், ஏறக்குறைய 17 அடி அகல நிலம்தான் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒருபக்கம் பேருந்துகள் சென்றால் மறுபக்கம் வாகனங்கள் செல்ல முடியாத நிலைமை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *ஆகவே, அந்தச் சாலையை அகலப்படுத்தித் தரவேண்டும். வனத் துறை எந்தவிதத்திலும்*

2022 ஏப்ரல் 27]

பயன்படாத அளவுக்கு நிலத்தை அளந்து கொடுத்திருக்கிறது. முன்பு சாலை அமைக்காத நேரத்தில்கூட 30 அடி அகலம் இருந்தது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சரிசெய்து தருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் உள்ள சாலைகளை அகலப்படுத்துவதாகவோ அல்லது வேறு புதிதாக சாலை அமைப்பதாகவோ இருந்தால் அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலையின் நீளம், அகலம் எவ்வளவு தேவை என்பதை அளந்து, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அதாவது, ஒரு ஹெக்டேர் இடத்திற்குக் குறைவாக இருந்தால் அதனைத் தமிழ்நாடு அரசு செய்து தருவதற்கு உரிமை உள்ளது. அதேநேரத்தில் ஒரு ஹெக்டேர் இடத்திற்கு அதிகம் வந்தால், மத்திய அரசுக்குப் பிரேரணை அனுப்பி, அனுமதி பெற்று செய்து தருவதற்கு தயாராக உள்ளோம். அதேநேரத்தில் சாலைக்காக எவ்வளவு நிலம் இருக்கிறது, புதிதாக எவ்வளவு நிலம் தேவை என்பதைக் கணக்கிட்டு, புதிதாக எடுக்க வேண்டிய நிலத்திற்குப் பதிலாக 2 பங்கு நிலத்தை வனத் துறைக்கு ஏதாவது ஒரு இடத்தில் கொடுக்க வேண்டும். அதே மாவட்டத்தில் கொடுக்க முடிந்தால், கொடுக்கலாம். அதே மாவட்டத்தில் கொடுக்க முடியவில்லையென்றால், உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, வேறு மாவட்டத்திலிருந்தாவது வனத் துறையிடமிருந்து எடுக்கப்படும் நிலத்திற்கு ஈடாக இரண்டு பங்கு நிலம் கொடுத்தால் அதனை எடுத்துக்கொண்டு, உத்தரவு பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*